# பத்திரிக்கை செய்தி

## பட்டாவில் பெயர் மாற்றம் செய்ய ரூ.15,000/- லஞ்சம் கேட்டு வாங்கிய கிராம நிர்வாக அலுவலர் கைது

புகார்தாரர் திரு.அரவிந்த், கம்மாளபட்டி கிராமம், சேலம் மாவட்டத்தில் வசித்து வருகிறார். புகார்தாரர் தன்னுடைய நிலத்திற்கு பட்டா பெயர் மாற்றம் செய்ய வேண்டி கிராம நிர்வாக அலுவலகம், தும்பல்பாடி கிராமம், சேலம் தாலுகா, சேலம் மாவட்டத்தில் விண்ணப்பித்திருந்தார். திருமதி.பாலம்பாள், கிராம நிர்வாக அலுவலர், தும்பல்பாடி கிராமம், சேலம் தாலுகா, சேலம் மாவட்டம் அவர்கள் விண்ணபத்தினை பரிசீலனை செய்து புகார்தாரருக்கு பட்டா பெயர் மாற்றம் செய்ய தனக்கு ரூ.15,000/- லஞ்சமாக கொடுக்க வேண்டும் என கேட்டுள்ளார். லஞ்சம் கொடுக்க விரும்பாத புகார்தாரர், சேலம் மாவட்ட லஞ்ச ஒழிப்பு பிரிவில் அளித்த புகாரின் பேரில் இன்று 10.07.2024, பொறிவைப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. மேற்படி பொறிவைப்பு நடவடிக்கையின் போது திருமதி.பாலம்பாள், கிராம நிர்வாக அலுவலர் அவர்களின் உத்தரவின் பேரில் திரு.காமராஜ் (தனிநபர்) அவர்கள் லஞ்ச பணம் ரூ.15,000/-யை புகார்தாரரிடமிருந்து பெற்றபோது ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை அலுவலர்களால் இருவரும் கைது செய்யப்பட்டனர்.

# PRESS NOTE

## VILLAGE ADMINISTRATIVE OFFICER ARRESTED FOR DEMAND AND OBTAINMENT OF BRIBE Rs.15,000/- FOR PATTA NAME TRANSFER

The complainant Tr.Aravind, is residing at Kammalapatty Village, Salem District. The complainant had applied at Thumbalpadi Village Administrative Office, Salem Taluk, Salem District for patta name transfer. Tmt.Balambal, Village Administrative Officer, Thumbalpadi Village, Salem Taluk, Salem District demanded bribe of Rs.15,000/- for patta name transfer. Not willing to give bribe, the complainant approached the Vigilance and Anti-Corruption, Salem detachment and gave complaint. In this connection a case was registered and a trap was organized today (10.07.2024). During trap proceedings, on the instruction of Tmt.Balambal, Village Administrative Officer, Tr.Kamaraj, Private Individual received the bribe amount of Rs.15,000/- from the complainant. Both the accused were arrested.